1972 ஆகஸ்ட் 23]

" ஏ " பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநர், பட்டமேற்படிப்புப் பட்டம் பெற்றுள்ள அரசுக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்களாகப் பணியாற்ற விரும்பும் " ஏ " பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிப் பணியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்களைப் பரிவுரை செய்து அதற்கென்று பட்டியலைத் தயாரித்து கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்புகிருரா ?

(இ) ஆமெனில், இத்தகைய சலுகை அரசு உயர்நிலைப் பள்ளி " பி " பிரிவு ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறதா?

(உ) இது குறித்து " ஏ " பிரிவினருக்கும் " பி " பிரிவினருக்கும் இடையே காட்டப்படும் வேறுபாடு அகற்றப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தகுதி வாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்களை அவ்வப்பொழுது கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கிருர். இதற்கென்று தகுதி வாய்ந்தோர் பட்டியலொன்று பள்ளிக் கல்வி இயக்குநர் தயாரித்து வைத்துக்கொள்வதில்லை.

(இ) இத்தகைய சலுகை "பி" பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அளிக்க விதிகள் இடந்தரவில்லை என்ருலும் அப்பிரிவைச் சார்ந்த தகுதியுடைய பட்டதாரி ஆசிரியர்களின் உதவிப் பேராசிரியர் பதவிக்கு அனுப்பும் விண்ணப்பங்களையும் பள்ளிக் கல்வி இயக்குநர் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கிருர்.

(உ) கேள்விக்கிடமில்லை.

Abortion under the Family Planning Scheme

220. *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state : the number of women who underwent induced abortion under the Family Planning Scheme till 31st March 1972 in Tamil Nadu?

[1972 ஆகஸ்ட் 23

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு கருச்சிதைவு

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டு கிறேன்—

குடும்ப நலத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் எவ்வளவு பெண் களுக்கு கருச்சிதைவு 31—3—1972 வரை செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : யாருக்கும் செய்யப்படவில்லை.

திரு. எல். பலராமன் : இந்தக் கருத்தடை பெண்களுக்குச் செய்வது, இந்துமத அடிப்படையில் பார்த்தால், பாவமல்லவா ? அது குறித்து நம்முடைய தி.மு.க. அரசின் கொள்கை என்ன ? அது என்ன கருதுகிறது என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாவ புண்ணியம் பற்றி அகில இந்திய அரசுக்கு என்ன கருத்தோ அதே கருத்துத்தான் தமிழக அரசுக்கும் இருக்கிறது. இது கருத்தடை அல்ல, கருச்சிதைவு. சமுதாயத்தில் இந்தக் கருவுற்ற பல பெண்கள் வாழ்க்கையில் தொல்லை களுக்கு உள்ளாகிறார்கள். அந்தக் கருச்சிதைவு செய்யாவிடில் ஏற்படக்கூடிய நோய், நரம்பு பலவீனம் முதலியவைகளால் வரக் கூடிய அபாயங்களுக்காகவும் அல்லது வேறு தவறுகள் காரணமாக ஏற்பட்டிருப்பின் அவர்கள் பரிதாபமான நிலைக்கு ஆளாக்கப்படு வதைத் தடுப்பதற்காகவும் அந்த நிலையில் கருவை அழிப்பதற்கு இது உதவியாகச் செய்யப்படுகிற ஒன்றாகும். அந்த நிலையில், ஏப்ரல் மாதம் 218 பேருக்கும், மே மாதம் 311 பேருக்கும், ஜூன் மாதம் 251 பேருக்கும் நடைபெற்றிருக்கிறது. ஏறத்தாழ இப்போது 1000 பேருக்கு இந்த 6 மாதத்தில் நடைபெற்றிருக்கிறது.

Satellite Towns

* 221 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether satellite towns are to be developed around **Madras** City; and

(*b*) if so, the details thereof?